

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 07.08.2026


# உதயநிதி ஏற்படுத்திய எழுச்சி!

“எப்போதும் எனக்கு அதிக விளம்பரம் தேடித் தருகிறவர்கள் எனது எதிரிகள் தான்” என்பார் தந்தை பெரியார். அப்படித் தான் நடந்து கொள்கிறார் முதலமைச்சர் விஜய். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியை கைது செய்து முடக்க நினைத்ததன் மூலமாக ஒட்டுமொத்த திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களும் எழுச்சியும் மலர்ச்சியும் கொண்ட வீரர்களாக எழுந்து நிற்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் கட்சி சார்பற்றவர்களும் உதயநிதி மீதான நடவடிக்கையைக் கண்டித்து கொந்தளித்துப் பேசிவருகிறார்கள். முதலமைச்சர் விஜய், தனக்குத் தானே ‘சூனியம்’ வைத்துக் கொண்டார் என்பதே நேற்றைய நிகழ்வுகள்!

**முதலமைச்சராக விஜய் வந்தது முதல் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் அதலபாதாளத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறது. பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாள் இல்லை. எங்கும் போதைப் பொருள் நடமாட்டம். கொலை, கொள்ளை, திருட்டு, அரிவாள் வெட்டு, பெட்ரோல் குண்டு வீச்சுகள் என சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.பல்வேறு குற்றச் சம்பவங்களில் த.வெ.க. நிர்வாகிகளே கைதாகி வருகிறார்கள். அமைச்சர்களே பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி வருகிறார்கள். இது எதையும் முதலமைச்சர் விஜய்யால் தடுக்க முடியவில்லை.**

தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த பிரச்சினைகளில் வாய்மூடிக் கிடக்கிறார். காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை மொத்தமாக தாரை வார்த்து விட்டார். மாதம் தோறும் வழங்க வேண்டிய நீரைக் கூட கர்நாடகம் தர மறுக்கிறது. அதைத் தட்டிக் கேட்க யோக்கியதை அற்ற முதலமைச்சராக அவர் இருக்கிறார். மேகதாது அணையைக் கட்டித் தீருவோம் என்பதில் கர்நாடகம் உறுதியாக இருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. இத்தகைய கையறு நிலையில் இருக்கும் முதலமைச்சர் விஜய், தனது முகத்திரை கிழிந்து விட்டதை மறைக்க எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியைக் கைது செய்து பிரச்சினையைத் திசை திருப்பப் பார்த்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் வீறுகொண்ட போராட்டத்தின் விளைவாக, ‘நாங்க அவரை கைது செய்யப் போவது இல்லை, பேசிட்டு விட்டுவிடுவோம்’ என்று மழுப்பல் பதிலை நீதிமன்றத்தில் சொன்னது விஜய் அரசு. அப்படிச் சொல்லும் சூழ்நிலையை உருவாக்கி வைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள்.

‘உங்களைக் கைது செய்திருக்கிறோம்’ என்று சொல்லிவிட்டு, ‘கைது செய்யப் போவதில்லை’ என்று நீதிமன்றத்தில் சொன்னதைப் போல ஏமாற்றுக் காரியம் இருக்க முடியுமா?

**‘12 மணி வரைக்கும் எந்த முடிவும் எடுக்க வேண்டாம்’ என்று சென்னை உயர்நீதிமன்றம் சொன்ன பிறகும், அதற்கு முன்னதாக சென்னையில் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றது ஏன்? முதலமைச்சர் விஜய் இதன் மூலமாக என்ன சொல்ல விரும்புகிறார்? ‘நீதிமன்றத்தை மீறியவன் நான்’ என்று நினைக்கிறாரா? நீதிமன்றங்கள் என்றால் என்னவென்றாவது அவருக்குத் தெரியுமா?**

முதலமைச்சர் விஜய்க்கு திராணி இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தஞ்சாவூரில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லட்டும்!

“எந்த மாதிரி அமைச்சர்கள் அமைந்திருக்கிறார்கள்? திருட்டு லாட்டரி விற்கிற ஒரு அமைச்சர், திருட்டு விசிடி விற்கிற ஒரு அமைச்சர், பிளாக்கில் டிக்கெட் விற்கிற ஒரு அமைச்சர், உருட்டுக் கட்டையுடனே சுத்திக் கொண்டிருக்கிற ஒரு அமைச்சர், எல்லாவற்றுக்கும் மேலாக போதைப் பவுடர் அமைச்சர். இப்படி மொத்த கேபினெட்டுமே ஒரு ஜோக்கர் கூட்டமாக இன்றைக்கு தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது” என்று குற்றம் சாட்டி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி. இதற்குப் பதில் சொல்லத் திராணி இருக்கிறதா முதலமைச்சர் விஜய்க்கு?

சொந்தக் கட்சிக்காரரை, “அவனைத் தூக்கி வைத்து ஜட்டியோட வைத்து அடித்தே கொன்னுடுவேன்” என்று மிரட்டுகிறார் சமூகநலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி. ‘என்னோட வீடியோ இருக்குன்னு மிரட்டுகிறார்கள்’ என்று அவரே பேட்டி தருகிறார். மிரட்டுவது யார்? அவரது கட்சிக்காரர்கள் தானே? இவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை உண்டா? விஜய் ரசிகையை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய குற்றச்சாட்டில் சிக்கி இருக்கும் ஸ்ரீவைகுண்டம் சரவணன்மீது இன்று வரை நடவடிக்கை இல்லை. அந்த ரசிகையை கட்சியை விட்டு நீக்கிவிட்டார்கள். அரசு வழக்கறிஞர் நியமனத்தில் பல லட்சம் லஞ்சம் என்று சொன்ன த.வெ.க. உறுப்பினர் ஞானசௌந்தரியைக் கட்சியை விட்டு நீக்கிவிட்டார்கள். இவர் யாரைக் குற்றம் சாட்டினாரோ அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. இத்தகைய துப்புக் கெட்ட ஆட்சிக்கு தூய ஆட்சி என்று பெயர்.

ஆனால் தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம் நடத்திய அடுத்த நாளே எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்கிறார்கள். அவர் ஆபாசமாகப் பேசிவிட்டார் என்ற அவதூறை அவர்களே கிளப்பி அசிங்கப்படுத்த நினைத்தார்கள். அதில் அவர்களே அசிங்கப்பட்டு நிற்கிறார்கள். தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டார்கள்.

**ஆபாசமாகவும் அசிங்கமாகவும் கெட்ட வார்த்தைகளைச் சரளமாக பயன்படுத்துவதிலும் கை தேர்ந்தவர் முதலமைச்சர் விஜய் தான். அவர் மீது எத்தனை வழக்குகள் போடுவது?**

**முதலமைச்சர் விஜய்யின் மனைவி சங்கீதா மணவிலக்கு கேட்டு செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். சங்கீதாவை அசிங்கப்படுத்தியது விஜய் ரசிகர்கள் தான். இவர்கள் மீது எத்தனை லட்சம் வழக்குகள் போடுவது? தனது மனைவிமீது கொச்சையான அவதூறு கிளப்பியவர்களைத் தடுக்க துப்பு இல்லை. உதயநிதி மீது வழக்கு போடத் துடிப்பதற்கு வெட்கமாக இல்லையா?**

கட்டிய மனைவியை ‘வொர்த் இல்லை’ என்று சொன்னவருக்கு ‘வொர்த்’ யார் என்பதை ஊருக்குக் காட்டும் நாளாக ஆகஸ்ட் 4 அமைந்துவிட்டது.

●●

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம்

# சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்செல்வன் - கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் வாழ்த்துப் பெற்றனர்!





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.8.2026) மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சீர்காழி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் செந்தில் செல்வன், எம்.எல்.ஏ. மற்றும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தி.மு. இராசேந்திரன், எம்.எல்.ஏ., ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். அத்துடன், கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது கழக பொதுச்செயலாளர் துரைமுருகன், கழக முன்னணியினர் மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் – மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (ஆக.7)

# முத்தமிழறிஞர் கலைஞரின் 8வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

### ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைசிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளினையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் **“அமைதிப் பேரணி”, இன்று (ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு சென்னை தென்மேற்கு சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள் : 4.8.2026 **சென்னை மாவட்ட தி.மு.க.**

# இன்று (ஆக.7) முத்தமிழறிஞர் கலைஞரின் 8வது நினைவு நாள் அமைதிப் பேரணி!

## சென்னை மண்டல அயலக அணி நிர்வாகிகள் பங்கேற்க அழைப்பு!

*சென்னை, ஆக.7-*

*தமிழினத்தின் விடிவெள்ளியாக, நவீன தமிழ்நாட்டின் சிற்பியாக வாழ்ந்து மறைந்த நமது ஆருயிர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான ஆகஸ்ட் 7ஆம் தேதி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே.*

*அதன்படி, இந்த ஆண்டும் வருகின்ற ஆகஸ்ட் 7 அன்று, சென்னை மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தை நோக்கி அமைதிப் பேரணி மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், நடைபெறும் இந்தப் பேரணியில், முத்தமிழறிஞரின் புகழுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகக் கழகத் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் அணித்திரள வேண்டும்.*

*கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணியாற்றி வரும் அயலக அணியின் பங்களிப்பு இந்தப் பேரணியில் மிகவும் இன்றியமையாததாகும். குறிப்பாக, கீழ்க்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த அயலக அணி நிர்வாகிகள் இந்த அமைதிப் பேரணியில் எவ்விதத் தொய்வுமின்றி, முழுமையாகக் கலந்துகொள்ள வேண்டும் எனச் சிறப்புக் கவனத்துடன் அறிவுறுத்தப்படுகிறது:*

*சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த, கீழ்க் கண்ட பொறுப்புகளில் உள்ள அயலக அணி நிர்வாகிகள் அனைவரும் இந்தப் பேரணியில் கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டும்:*

*அயலக அணியின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள்,*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவர் ஊட்டிய உணர்வும், கொள்கை இலட்சியங்களும் நம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருக்கின்றன. அந்த உணர்வோடு, ஆகஸ்ட் 7 அன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் அயலக அணி நிர்வாகிகள் அனைவரும் அணிதிரண்டு வர வேண்டும் என கழக அயலக அணி துணைச் செயலாளர் - சென்னை மண்டல பொறுப்பாளர் பரிதிஇளம் சுருதி எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.*

# அவர்களுக்குத் தெரியாது....!



**அவர்களுக்குத் தெரியாது இரும்பை உருக்கும் நெருப்பு**
**உதயநிதி ஸ்டாலின் நீ என!**

**அவர்களுக்குத் தெரியாது**
**மிசா, தடா, அடக்குமுறைகள்**
**மரண ஓலம், குருதி சிந்தல்**
**கண்டு எழுந்தவன் நீ என!**

**அவர்களுக்கு தெரியாது**
**காவலர்கள் நெருக்கடியும்**
**அரசு மரியாதையையும்**
**பார்த்த பரம்பரை நீ என!**

**அவர்களுக்குத் தெரியாது**
**நீரில் போட்டால் மீன் நீ என!**
**நிலத்தில் போட்டால் விதை நீ என!**
**சிறையில்போட்டால் சிங்கம் நீ என!**
**மு.க.ஸ்டாலின் இரத்தம் நீ என!**

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி

